## இலங்கை தேசிய நீர்உயிரின வளர்ப்புகள் அபிவிருத்தி அதிகாரசபை - 2014

இலங்கை தேசிய நீர்உயிரின வளர்ப்புகள் அபிவிருத்தி அதிகாரசபையின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1998 இன் 53 ஆம் இலக்க இலங்கை தேசிய நீர்உயிரின வளர்ப்புகள் அபிவிருத்தி அதிகாரசபை அதிகாரச்சட்டத்தின் 25 (2) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்கள் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வுச் சான்றுகள் போதியளவும் பொருத்தமானதும் என நான் நம்புகின்றேன்.

## 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து இலங்கை தேசிய நீர்உயிரின வளர்ப்புகள் அபிவிருத்தி அதிகாரசபையின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நியம இலக்கம் 01 இன் பிரகாரம் எந்தவொரு முன்வைத்தல் முறைமையொன்று பயன்படுத்தப்பட்ட போதிலும், அறிக்கையிடப்பட்ட திகதியில் இருந்து 12 மாதங்களுக்கு முன்னர் மற்றும் 12 மாதங்களுக்கு பின்னர் அறவிடுவதற்கு எதிர்பார்க்கப்படும் சொத்துக்கள் திரவத்தன்மை பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் வெவ்வோறாக வெளிப்படுத்தப்பட வேண்டிய போதிலும், அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நியம இலக்கம் 02 இற்கு முரணாக முதலீட்டுச் செயற்பாடொன்றான முதலீட்டு வருமான பெறுவனவுகள் ரூபா 750,148 தொகை செயற்பாட்டு நடவடிக்கைகள் மூலம் உருவான வருமானமாக கருதப்பட்டிருந்தது.

(இ) நியம இலக்கம் 07 இன் பிரகாரம் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் என்பவற்றின் கொண்டு செல்லல் பெறுமதி பொருண்மையாக வேறுபடும் போது வருடாந்தம் மீள் மதிப்பீடு மேற்கொள்ளல் மற்றும் பொருண்மையற்ற வேறுபாடுகளுடன் கூடிய ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களுக்காக 3 வருடங்களுக்கு அல்லது 5 வருடங்களுக்கு ஒருமுறை மீள்மதிப்பீடு செய்யப்பட வேண்டிய போதிலும், அதிகாரசபை 1999 ஆம் ஆண்டின் போது தாபிக்கப்பட்டதன் பின்னர் முதலாவது தடவை 2012 ஆம் ஆண்டின் போது சொத்துக்கள் மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நிதிக்கூற்றுக்களில் மீள்மதிப்பீட்டு சீராக்கம் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.2 கணக்கீட்டுக் கொள்கைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சொத்துக்கள் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படுகையில் கிரய முறை அல்லது மீள்மதிப்பீட்டு முறை எனும் இரு முறைகளில் ஒரு முறையை மாத்திரம் பின்பற்றப்பட வேண்டிய போதிலும், அதிகாரசபையால் காணிகளில் ஒரு பகுதி மீள்மதிப்பீட்டு முறையிலும் எஞ்சிய பகுதி கிரய முறையிலும் கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) குறிப்பான கணக்கு நடவடிக்கைகள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய முறை தொடர்பாக நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பதற்காக பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு

முறைமைகள் மேவுகை செய்யப்படாவிட்டால் அங்கு மிகவும் பொருத்தமான முறைக்கு (Best practice) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன், அதனைக் குறிப்பிட்டு கணக்கீட்டுக் கொள்கையொன்று தயாரிக்கப்பட்டு அது பின்பற்றப்பட வேண்டிய போதிலும், அதிகாரசபையால் உயிரியல் விஞ்ஞான சொத்துக்கள் கணக்கீடு செய்வது தொடர்பில் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக நடப்பாண்டின் போது வியாபார மற்றும் ஏனைய பெறுவனவுகளின் அதிகரிப்பு நிதி நிலைமைக்கூற்றின் பிரகாரம் ரூபா 965,536 ஆக இருந்த போதிலும், காசுப்பாய்ச்சல் கூற்றில் தொழிற்படு மூலதன மாற்றங்களில் அது ரூபா 2,023,278 ஆக சீராக்கம் செய்யப்பட்ட காரணத்தினால் ரூபா 1,057,742 ஆல் செயற்பாட்டு நடவடிக்கைகளுக்காக செலவிடப்பட்ட காசுப் பாய்ச்சல் கூடுதலாகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) காசுப்பாய்ச்சல் கூற்றில் செயற்பாட்டு நடவடிக்கைகளின் கீழ் தொழிற்படு மூலதன மாற்றங்களில் மீளாய்வாண்டிற்குரிய நடைமுறைச் சொத்துக்கள் மற்றும் நடைமுறைப் பொறுப்புக்கள் என்பவற்றின் முரண்கள் மாத்திரம் சீராக்கப்பட வேண்டிய போதிலும், அதிகாரசபையால் நடைமுறையல்லத பொறுப்புக்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்த ரூபா 9,633,616 பெறுமதியான ஒப்பந்த அடிப்படையிலான நிறுத்தி வைக்கப்பட்ட மீதிகளின் வேறுபாட்டையும் தொழிற்படு மூலதன மாற்றங்களுக்கு இணக்கம் செய்யப்பட்டிருந்தன.

(இ) மீளாய்வாண்டிற்குரிய கணக்காய்வுக் கட்டணங்கள் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டிற்குரிய செலுத்த வேண்டிய சம்பளம் மற்றும் வேதனங்கள் ரூபா 123,852 கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(உ) கணிப்பீட்டுப் பிழைகள் காரணமாக பிற்போடப்பட்ட வருமானம் ரூபா 121,414 ஆல் குறைத்து நிதிக்கூற்றுக்களில் சீராக்கப்பட்டிருந்தது
.

(ஊ) முன்னைய ஆண்டிற்குரிய பெறுமானத்தேய்வுச் சீராக்கம் ரூபா 3,923,420 தொகையை பின்னோக்கி சீராக்கம் செய்வதற்குப் பதிலாக மீளாய்வாண்டின் செலவினமொன்றாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(எ) 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக இருந்து வரும் நிதிக்கூற்றுக்களில் முன்கொண்டு வரப்பட்டுக் காணப்பட்ட ரூபா 43,678,802 பெறுமதியான இனங்காணப்படாத முடிவுறா வேலைகள் மீளாய்வாண்டின் போது சொத்துக்களுக்கு இணக்கம் செய்யப்பட்டிருந்ததுடன், அதற்காக வருடாந்த தேய்வு நிதிக்கூற்றுக்களில் இணக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஏ) அதிகாரசபையால் கையேற்கப்பட்டிருந்த அம்பாறை, பிங்கிரிய, மாபாகடவெவ மற்றும் இரணவில ஆகிய நிலையங்களில் அமைந்துள்ள 6.9 ஹெக்டேயார் காணியின் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ஐ) மீளாய்வாண்டின் போது விற்பனை செய்யப்பட்டிருந்த 5 மோட்டார் சைக்கிள்களின் கிரயம் மற்றும் அதற்குரிய பெறுமானத்தேய்வு என்பவற்றை இனங்கண்டு கணக்களுக்கு சீராக்கப்படாமல் இருந்ததுடன், விற்பனையிலிருந்து கிடைத்த ரூபா 133,758 ஆன முழுத்தொகையும் இலாபமாக நிதிக்கூற்றுக்களில் இணக்கம் செய்யப்பட்டிருந்தது.

### 2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பொலன்னறுவை மீன் இனவிருத்தி நிலையத்திலிருந்து மூன்று ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக பெற வேண்டியிருந்த வாடகை வருமானம் ரூபா 1,612,285 தொகை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவிடப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீன்குஞ்சுகள் விற்பனை செய்தமையால் 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக அரச நிறுவனங்கள் மற்றும் தனியார் தடாக உரிமையாளர்களிடமிருந்து பெறவேண்டியுள்ள கடன் மீதி ரூபா 1,120,699 ஆக இருந்ததுடன், ஓராண்டிற்கு மேற்பட்ட 4 ஆண்டுகள் வரையான காலப்பகுதிக்குரிய பெறவேண்டிய கடன் மீதி ரூபா 6,188,895 ஆக இருந்தன. அதிகாரசபை இக்கடன் தொகையை அறவிடுவதற்கு போதியளவில் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) 2 ஆண்டுகளுக்கும் 3 ஆண்டுகளும் இடைப்பட்ட காலப்பகுதியிலிருந்து வரும் ரூபா 7,283,242 கூட்டுத்தொகையான ஐந்து கணக்கு விடயங்கள் தீர்வு செய்யப்படாமல் நடைமுறைப் பொறுப்பின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் முதலியவற்றுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் முதலியவற்றுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவையின் XV ஆம் அத்தியாயத்தின் 9.6 ஆம் பிரிவு | குளிர் தாங்கும் ஆடைகள் கொள்வனவு செய்வதற்காக ஏழு உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 112,656 ஆன முற்பணங்களுக்காக எந்தவொரு உத்தியோகத்தராலும் குறித்த பணத்தில் குளிர் தாங்கும் ஆடைகள் கொள்வனவு செய்யப்பட்டமையை உறுதிப்படுத்துவதற்காக பற்றுச்சீட்டுக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் | |
| (i) நி.பி. 371(2) | வழங்கப்பட்ட முற்பணம் குறித்த பணி பூர்த்தியடைந்ததை உடனடுத்து தீர்க்கப்பட வேண்டிய போதிலும் அதிகாரசபையின் உத்தியோகத்தர்களுக்கும் வெவ்வேறு நிறுவனங்களுக்கும் மீளாய்வாண்டின் போது வழங்கப்பட்ட ரூபா 2,708,846 தொகையான முற்பணங்களைத் தீர்வு செய்வதற்கு 2 மாதங்கள் 9 முதல் மாதங்கள் வரையான காலம் தாமதப்படுத்தப்பட்டிருந்தது. |

| | | |
|---|---|---|
| (ii) | நி.பி. 138 மற்றும் 138 | ரூபா 270,000 பெறுமதியான அங்கீகரிக்கப்படாத 6 கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களுக்கும் ரூபா 321,196 பெறுமதியான உறுதிப்படுத்தப்படாத 12 கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களுக்கும் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. |
| (இ) | 2009 யூன் 01 ஆம் திகதிய டீஎம்எஸ்/ஏ/08/21 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்களச் சுற்றறிக்கை 30(1) | ஊழியர் சம்பளங்கள் திருத்தப்பட்டு மற்றும் மீள்தொகுதியிடப்பட்டு செய்து புதிய தொகுதியின் கீழ் உத்தியோகத்தர் சம்பள படி நிலைகளில் அமர்த்தப்படும் போது அப்போது சேவையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களில் 05 உத்தியோகத்தர்களுக்காக ஒரு நபருக்கு 9 சம்பள ஏற்றங்கள் வீதம் கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தது. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டினுள் அதிகாரசபையின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 26,327,842 பற்றாக்குறையானதுடன் இதனோடொத்த முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 9,111,373 ஆக இருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் ரூபா 17,216,469 ஆன வீழ்ச்சியொன்றைக் காண்பித்திருந்ததுடன், அது 189 சதவீதமாக இருந்தது. அச்சீட்டுச் செலவினம், ஆய்வுகூட உபகரணங்களைக் கொள்வனவு செய்தல், பணிக்கொடை ஒதுக்கீடு, அறவிடமுடியாக் கடன் மற்றும் உபசரிப்புச் செலவினம் அதிகரித்தமை என்பன இதற்கு பிரதான காரணங்களாக இருந்தன.

### 3.2 பகுப்பாய்வு ரீதியான நிதிசார் மீளாய்வு

முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் போது அதிகாரசபையின் 13 கணக்கு விடயங்களின் செலவினம் 21 சதவீதத்திலிருந்து 1052 சதவீதம் வரை அதிகரித்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

அதிகாரசபை அறிக்கைகளின் படி கடந்த 05 ஆண்டு காலத்தினுள் நன்னீர் மற்றும் உவர்நீர் மீன் உற்பத்தி பின்வருமாறு காணப்பட்டது.

| ஆண்டு | உவர் நீர் மீன் உற்பத்தி | நன்னீர் மீன் உற்பத்தி |
|---|---|---|
| | மெ.தொன் | மெ.தொன் |
| 2010 | 330,240 | 51,390 |
| 2011 | 381,260 | 59,560 |
| 2012 | 417,220 | 68,950 |
| 2013 | 445,930 | 66,910 |
| 2014 | 459,300 | 75,750 |

2013 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் போது உவர் நீர் மீன் உற்பத்தி மற்றும் நன்னீர் மீன் உற்பத்தி முறையே 3 சதவீதத்தாலும் 13 சதவீதத்தாலும் அதிகரித்திருந்தன.

**4.2 பதவியணி நிர்வாகம்**

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அதிகாரசபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் எண்ணிக்கை 551 ஆக இருந்ததுடன், உள்ளவாறான பதவியணியினர் எண்ணிக்கை 440 ஆக இருந்தது. அதன் பிரகாரம் வெற்றிடங்களின் எண்ணிக்கை 111 ஆக இருந்ததுடன், இப்பதவிகளை நிரப்புவதற்கு அதிகாரசபையால் 2015 யூன் 30 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**5.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

பாதீட்டுத் தொகைக்கும் உள்ளபடியான தொகைக்கும் இடையே 26 விடயங்களில் 17 சதவீதத்திலிருந்து 1054 சதவீதம் வரையான முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூவமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் காரணியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் தொடர்பான நலிவுகள் அவ்வப்போது அதிகாரசபையின் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) சொத்துக்கள் நிர்வாகம்
(இ) முற்பணக் கொடுப்பனவு
(ஈ) காணி குத்தகைக்கு வழங்கல்